அவர்களுடைய வசதிக்காக இந்தக் கிளையை எவ்வளவு வேக மாக அமைத்துக் கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கேட்காமல் கொடுக்கக்கூடிய வல்லமை படைத் தவர்கள். ஆகவேதான் நமது உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வுடனே இந்த இடத்தை நாங்கள் தேர்வுசெய்திருக்கிறோம் என்று சொன்னோம். ஓரிரு மாத காலத்தில் அந்தப் பணிகள் துவங்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவாக முடித்துக் கொடுப் போம் என்று சொன்னதற்காக மாண்புமிகு நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன். இது தொடர்பான கேள்வி கேட்கவேண்டும்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர் களின் ஆட்சியில் கேட்காமல் கொடுப்பார்கள் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்பில் லாத துணைக் கேள்வி இது. இந்த மாதிரிக் கேட்டு அவையின் நேரத்தைத் தயவுசெய்து வீணாக்காதீர்கள்.

வினா எண் 307. டாக்டர் வெ. புருஷோத்தமன். மாண்பு மிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

307—

பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறி தொழிற்சாலை.

*1052 டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறிகள் தொழிற் சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1992 மார்ச் 23]

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

(அ) பெண்ணாகரம் தொகுதியில் விசைத்தறிகள் பாக்டரி ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஏற்கனவே எதைக்கேட்டாலும் இந்தத் தொகுதிக்கு இல்லை என்ற பதில்தான் கிடைக்கிறது. இருப்பினும் தமிழ்நாட்டிலே பெண்ணாகரம் தொகுதியில் பாப்பாரப்பட்டி பகுதியில்தான் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக உள்ளார்கள். இது மிகவும் பின்தங்கிய பகுதி. இந்த நிதிநிலை அறிக்கையில் கூட 5,000 விசைத்தறிகள் அமைக்கப் படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பகுதியில் 2-க்கு 60 பாலிஸ்டர் நூலைக் கொண்டு ஏற்றுமதி செய்யக் கூடிய துணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். துணி நெய்வது பற்றியெல்லாம் அவருக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிக்கு குறைந்த பட்சம் 100 விசைத்தறிகளைத் தொழில் கூட்டுறவு நெசவாளர் சங்கம் மூலமாக ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொண்டுவர இருக்கிற இந்தத் திட்டமானது 5,000 கைத்தறிகளை விசைத்தறிகளாக ஆக்குகிற திட்டம். மாண்புமிகு உறுப்பினர் கேட்கிற கேள்வி விசைத் தறி பேக்டரி உருவாக்க வேண்டும் என்பது. ஆதலால் விசைத் தறி பேக்டரி உருவாக்குவதற்கு இயலாது. காரணம் ஏற்கெனவே கைத்தறி இயக்குநரால் இயக்கப்பட்டு வந்த 45 விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் 20 பேக்டரிகளாகவும், எஞ்சியவை பிரதம விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களாகவும் இயங்கி வருகின்றன. இவைகளில் இரண்டு மட்டுமே இலாப கரமாகச் செயல்பட்டு வருகிறது. ஆதலால் இது இயலாது. கைத்தறிகளாக இருப்பவைகளை விசைத்தறிகளாக மாற்று வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி. குறைந்த பட்சம் 100 தறிகளை விசைத்தறிகளாக தற்போது மாற்றிக் கொடுத்தால் குறைந்தபட்சம் 100 பெண்களுக்கு நேரடியாகவும், 100 பெண்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக்கு வசதி இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியில் 100 தறிகளை விசைத்தறிகளாக மாற்ற அமைச்சர் அவர்கள் ஆவன செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களாக உள்ளவர்கள் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் மனு தாக்கல் செய்வார்களேயானால், அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 308. டாக்டர் அ. ஸ்ரீதரன். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

308—

பரம்பிக்குளம்-ஆழியார் அணையிலிருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்குதல்.

*817 டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரம்பிக்குளம—ஆழியார் அணையிலிருந்து Special water Release— என்ற அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்தி விவசாயத்திற்கு மட்டும் தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்ட அணைகளிலிருந்து சிறப்பு நீர்விடுப்பு அதாவது Special water Release— என்ற அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கோ, சர்க்கரை ஆலைகளுக்கோ தண்ணீர் திறந்துவிடுவதில்லை. விவசாயத்திற்கு மட்டுமே தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன். இருக்கையில் இல்லை. திரு. வி. பி. சந்திரசேகர்.